# **26-09-2021 அன்று நடைபெற்ற யாதவர் பேரவை பொதுக்குழு தீர்மானங்கள்**

1.தமிழக அமைச்சர் அவையில் முதன்முதலாக இரண்டு யாதவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கியதற்காக தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்த பொதுக்குழு நன்றி தெரிவித்து கொள்கிறது.

2.நடைபெற்ற சுதந்திர தின விழா பேரூரையில் யாதவ சமுதாயத்தை சார்ந்த சுதந்திர போரட்ட வீரரும் முதன்முதலாக விடுதலைக்கு வித்திட்ட மாமன்னர் கட்டலாங்குளம் அழகுமுத்துக்கோன் அவர்களுடைய திருநாமத்தை குறிப்பிடாதது யாதவ மக்களை அவமதித்ததாக கருத்து நிலவுகிறது. அழகுமுத்துக்கோன் அவர்களுடைய பெயர் விடுப்பட்டது தற்செயலானது எவ்வித உள் நோக்கத்துடன் ஆனது அல்ல என்பதை நிறுபிக்கின்ற வகையில் வரும் காலங்களில் இதை தவிர்க்க வேண்டும் என பேரவை தமிழக அரசை கேட்டு கொள்கிறது

3.மதுரை யாதவர் கல்லூரியை இனியும் தாமதம் செய்யாமல் நீதிமன்ற உத்தரவின்படி எண்ணிகையில் அதிக உறுப்பினர்களை கொண்டுள்ள யாதவர் கல்வி நிதி வசம் ஒப்படைக்க ஆவன செய்ய ஆளும் தமிழக அரசினை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது. தொடர்ந்து ஏற்பட்டுவரும் காலதாமதத்தை அரசு தலையிட்டு கெடு நிர்ணயித்து யாதவர்களின் நேரடி நிர்வாகத்துக்கு ஆவன செய்ய யாதவர் பேரவை கேட்டு கொள்கிறது.

4.நெடுங்காலமாக தனித் தொகுதியாக உள்ள சட்டமன்ற தொகுதிகளை சுழற்சி முறையில் பொது தொகுதியாக மாற்றி அமைத்து தேர்தல் நடத்திட இப்பொதுகுழு தேர்தல் ஆணையத்தை வலியுறுத்துகின்றது.

5.மதுரை அல்லது தூத்துக்குடி விமான நிலையத்திற்கு முதல் சுதந்திர போராட்ட வீரரான அழகுமுத்துக்கோன் பெயரை சூட்டி அவரது புகழும் தியாகமும் நாட்டுப்பற்றும் வருங்கால சந்ததி அறியச் செய்திட மத்திய அரசை இப்பொதுக்குழு வேண்டுகிறது.

6.தமிழக மேய்ச்சல் நிலங்கள் மந்தைவெளி ஒதுக்கீடு நிலங்கள் முறை மாற்றம் செய்யப்படுவதை இப்பொதுக்குழு கண்டிக்கிறது. ஏற்கனவே முறை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை கண்டறிந்து அதற்கு இணையான வேறு நிலங்களை ஒதுக்கீடு செய்து கால்நடை வளர்ப்போர் வாழ்வாதாரம் உயர ஆவன செய்ய இப்பொதுகுழு தமிழக அரசை கேட்டுக் கொள்கிறது.

7.ஆரம்பப் பள்ளி பாடபுத்தகங்களில் அழகுமுத்துக்கோன் வரலாறு முழுமையாக இடம் பெற செய்ய அரசு கல்வித்துறையை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது

8.நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து பெரும்பாலான மக்கள் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த கோரி வருவதை மத்திய அரசை பரிசீலனை செய்து செயல்படுத்திட யாதவர் பேரவை கேட்டுக்கொள்கிறது.

9. OBC அனைத்து பிரிவினரும் ஜனத்தொகை அடிப்படையில் இட ஒதுக்கீடு பெறுகிற வகையில் சட்ட மாற்றம் செய்து சம நிலையில் சமூக நீதி காத்திட அரசு ஆவன செய்ய வேண்டும் என இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது மற்ற மாநிலங்கள் போல் அல்லாது தமிழகத்தில் மட்டும் MBC ஒதுக்கீடு செய்ததின் முலம் உண்மையிலேயே பாதிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களின் நிலையை அரசு பணியில் உள்ளவர்களின் புள்ளி விவரங்களின் மூலம் பெற்று யாதவ சமுதாயத்துக்கு உரிய உள்ஒதுக்கீடு கிடைக்க ஆவன செய்ய தமிழக அரசை யாதவர் பேரவை கேட்டுக்கொள்கிறது.

10. Covid தொற்று காரணமாக தேர்தல் நடத்த வேண்டியதை தவிர்த்து இதே நிர்வாகம் அடுத்த பொதுக்குழு வரை தொடர்ந்து செயல்பட அனுமதித்து தீர்மானிக்கிறது

11. சுதந்திர இந்தியாவில் தொடர்ந்து முறையான வளர்ச்சி ஆட்சி, பங்கு அதிகாரம் பெறாத பரவலாகவாழும் யாதவ சமுதாயத்தின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு சமீபத்தைய ஆந்திர அரசின் நடைமுறையைப் பின்பற்றி " yadava Welfare development corporation" அமைக்க தமிழக அரசை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

12. ஆடு வளர்ப்போர் கால்நடை வளர்ப்போர் நலனில் அரசு தனி கவனம் செலுத்தி அவர்களது கோரிக்கைகள் தனி கவனம் செலுத்தப்பட்டு உடனுக்குடன் ஆவணம் செய்ய இந்த பொதுக்குழு அரசை கேட்டுக் கொள்கிறது

13.நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலில் அனைத்து பகுதி யாதவர்களை நமக்குள்ளே போட்டிகளை தகர்த்து ஒரே அணியில் வாக்களித்து பெரவாரியான யாதவர்கள் பதவி பெற செய்ய பெறுவோம்.

14.தென் மாவட்டங்களில் அவ்வப்போது தலை தூக்கிய ஜாதி மோதல்களை கடுமையான நடவடிக்கையின் கட்டுப்படுத்தி வளர்ந்த

சமுதாயங்களிடமிருந்து யாதவ சமுகத்திற்கு பாதுகாப்பு தரவேண்டும் நல்லுறவு பேண செய்ய வேண்டும்.

15. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் உரிமைக்கான கூட்டமைப்பு மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் தற்கால நிகழ்வுகளால் பாதிக்கப்பட்ட அனைவருடன் இணைந்து சமுக நீதி வேண்டி போராடும் களத்தில் ஒட்டு மொத்த யாதவர்களின் பிரதிநிதியாக கலந்து கொண்ட யாதவர் பேரவையின் நிறுவனர் காந்தையா அவர்களையும் யாதவர்களின் நலனுக்காக அவ்வவப்போது குரல் கொடுத்து உண்மை நிலையை தமிழக மக்கள் அறியும் வண்ணம் தொலைக்காட்சி நிகழ்வுகளில் குரல் கொடுக்கும் மாற்று சமுதாயத்தை சேர்ந்த திரு, ரவிந்தரன் துரைசாமி அவர்களுக்கு பேரவை மனமார்ந்த பாராட்டை நன்றியையும் தெரிவித்து கொள்கிறது.

16.பொதுக்குழுவில் செயலர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டு அறிக்கையையும் தணிக்கை செய்யப்பட்டு பொருளாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 2020 – 2021 ஆண்டிற்க்கான வரவு செலவு கணக்கையும் ஏகமானதாக பொதுக்குழு ஏற்று கொள்கிறது நிதிநிலை அறிக்கையில் உள்ள வளர்ச்சி நிதியினை பொதுநிதியாக முறைமாற்றம் செய்து பயன்படுத்த பொதுக்குழு ஒப்புகொள்கிறது.